என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், ராணிப்பேட்டையில் நெட்டை, குட்டை வகை தென்னைக்கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றனவா என்று கேட்டார்கள். நெட்டை, குட்டை தென்னைகள் இரண்டுமே அங்கு தயார் செய்யப்படுகின்றன. தற்போது பண்ணைகளில் அதிகமாக அதனை உற்பத்தி செய்து, முளைக்க வைத்து, அந்தந்தப் பகுதிகளிலுள்ள கஜா புயலால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. தொடர்ந்து அந்தப் பண்ணையில் தென்னங்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. கோவிந்தராசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

70—

புதிய பேருந்துகள்

***8214—திரு. மா. கோவிந்தராசு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதி, பேராவூரணியில் உள்ள போக்குவரத்துப் பணிமனைக்கு புதிய பேருந்துகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2019 ஜூலை 9]

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பேராவூரணி பணிமனையில் 16 நகரப் பேருந்துகளும், 12 புறநகரப் பேருந்துகளும் மற்றும் 2 மாற்றுப் பேருந்துகளுமாக, மொத்தம் 30 பேருந்துகள் உள்ளன. தற்போது பெறப்பட்ட பேருந்துகளில் பேராவூரணி கிளைக்கு 4 புதிய பேருந்துகள் வழங்கப்பட்டுள்ளன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. கோவிந்தராசு.*

திரு. மா. கோவிந்தராசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, நம்முடைய முதல்வர் அவர்களையும், துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதி, பேராவூரணியிலிருந்து கோவைக்கும், திருச்செந்தூருக்கும் புதிய பேருந்துகளை இயக்க வேண்டுமென்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் பல்வேறு நேரங்களில் கோரிக்கை வைத்திருக்கிறேன். அந்த இரண்டு வழித்தடங்களிலும் புதிய பேருந்துகளை வழங்க வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு விதி 110—ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேராவூரணி தொகுதிக்கு ரூ.25 கோடியில் புதிய நவீன அரிசி ஆலையை வழங்கி பெருமை சேர்த்ததற்கு, எங்கள் தொகுதி மக்களின் சார்பிலே தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினையும், வணக்கத்தினையும் தெரிவித்து, அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய பேருந்துகள் வேண்டுமென்று கேள்வி கேட்டிருந்தார்கள். தற்போது கோவைக்கும், திருச்செந்தூருக்கும் புதிய வழித்தடத்தில் பேருந்துகள் இயக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்த வழித்தடத்தில் இயங்குகின்ற பேருந்துகளில் பயணிகளின் அடர்வுகளை ஆய்வு செய்து, தேவையிருக்குமாயின் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. கோவிந்தராசு அவர்கள்.*

திரு. மா. கோவிந்தராசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணியில் இருக்கின்ற அந்தப் பணிமனை மிகவும் பழுதடைந்துள்ளது. நீண்ட காலத்திற்கு முன், அதாவது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் காலத்திலே 1980 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட பணிமனை. அந்தப் பணிமனை மிகவும் பழுதுபட்டிருக்கின்றது. அருள்கூர்ந்து அதனைச் செப்பனிடுவதற்கு தாங்கள் ஆவன செய்ய வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பணிமனையைச் செப்பனிட்டுத் தர வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கிறார். போக்குவரத்துக் கழகத்தின் நிதிச் சுமையைக் கருத்தில்கொண்டு அந்தந்தச் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியைப் பெற்று பணிமனைகளைப் பராமரித்து வருகிறோம். சம்பந்தப்பட்ட அந்தப் பணிமனைகள் மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதிக்குட்பட்டதாயின், அவருடைய*

2019 ஜூலை 9]

தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியைக் கொடுத்தால், அந்தப் பணிமனைகள் பராமரிக்கப்படும் என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட அடைக்காகுழி, சூழார், கண்ணநாகம், மெதுகும்பல், குழிவிளை, நித்திரைவிளை ஆகிய பகுதிகளிலிருந்து, கிள்ளியூரை மையமாகக் கொண்டு இயங்குகின்ற தாலுகாவிற்குச் செல்வதற்கு பேருந்துகள் இல்லாத நிலை உள்ளது. 2, 3 பேருந்துகள் ஏறித்தான் செல்ல வேண்டிய நிலை உள்ளது. ஆகவே, கிள்ளியூர் தாலுகாவிற்கு மக்கள் நேரடியாகச் செல்வதற்கு புதிய பேருந்துகள் இயக்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேற்றுதான் என்னிடம் அந்தக் கோரிக்கையைக் கொடுத்திருக்கிறார். புதிய தாலுகா உருவாக்கப்பட்டு, அந்த தாலுகாவிற்கு மக்கள் சென்று வருவதற்கு பேருந்து வசதிகள் குறைவாக இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்து துறை, சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்து, தேவையிருக்குமாயின், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய வழித்தடங்களிலே கூடுதல் பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]